**முதன்மை மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்**

**முன்னிலை : திரு.V. பத்மநாபன், M.A., M.L., D.H.,**
**முதன்மை மாவட்ட நீதிபதி, திண்டுக்கல்**

2026–ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 20–ஆம் நாள் வியாழக்கிழமை

**<u>இடைநிலை மனு எண் –3/2026</u>**
**– உள் –**
**தேர்தல் அசல் மனு எண் – 36/2022**

கார்த்தியாயினி .... மனுதாரர் / மனுதாரர்

//எதிராக//

1. சரஸ்வதி, க/பெ.வாஞ்சிநாதன்
2. உமாவதி, க/பெ.செல்லமுத்து
3. சரஸ்வதி, க/பெ.குமரேசன்
4. தேவி, க/பெ.பவுன்ராஜ்
5. மாரியம்மாள் , க/பெ.தங்கவேல்
6. ரமணந்தி, க/பெ.துக்கையப்பன்
7. ஜெயஸ்ரீ, க/பெ.பாலமுருகன்
8. தேர்தல் அதிகாரி/செயல் அலுவலர், ஆயக்குடி பேரராட்சி.
9. மாவட்ட தேர்தல் அதிகாரி/மாவட்ட ஆட்சியர், திண்டுக்கல் மாவட்டம்,
10. தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்.

... எதிர்மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்

இந்த இடைநிலை மனு இந்நீதிமன்றத்தின் முன்பு 07.08.2026ம் தேதியன்று விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.பி.வேல்முருகன் அவர்களும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு. அருள் ஜோசப் அவர்கள் ஆஜராகியும், 8 முதல் 10 வரையான எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு தரப்பு வழக்கறிஞர்

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.20 15:05:43 +0530

ஆஜராகியும், 2 முதல் 7 வரையான எதிர்மனுதாரர்கள் அழைக்கப்பட்டும் ஆஜரிண்மையால் தோன்றாத் தரப்பினராக கருதப்பட்டும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய பரிசீலனையில் இருந்தும் வந்த இம்மனுவில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

<u>உ த் தி ர வு</u>

மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாண வாக்கு–மூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களுக்காக தேர்தல் அசல் மனு எண்.36/2022 ல் நீதிமன்ற சாட்சி –5 ஐ மீண்டும் அழைத்து மறுவிசாரணை செய்ய அனுமதித்து உத்திரவிடக் கோரி உ.வி.மு.ச. கட்டளை 18 விதி 17 மற்றும் பிரிவு 151 ன்கீழ் இம்மனு தாக்கல்.

2) **<u>மனுவிற்கு ஆதரவாக மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடெவிட் சங்கதிகள் சுருக்கம்</u>** :–

அசல் மனுவில் நீதிமன்ற சாட்சி–5 ஆக பழனி வட்டாட்சியர் முதல் விசாரணை செய்யப்பட்டு 09.07.2026 ம் தேதி 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். வழக்கு நடைபெற்ற சமயத்தில் மத்திய அரசால் கொண்டுவரப்பட்டட SIR வாக்காளர் திருத்தம் சரிபார்ப்பின்படி வேலுச்சாமி என்ற பெயருக்கு பதிலாக சக்திவேல் என்ற பெயர்தான் உள்ளது என்பது தெரியவந்தது. அதன்படி இம்மனுதாரர் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் மூலமாக நடவடிக்கை எடுத்ததில், பழனி வட்டாட்சியர் விசாரணை செய்து முத்தம்மாளின் வாரிசு சான்றிதழில் உள்ள வேலுச்சாமியின் பெயர் தவறு என்றும் சக்திவேல் என்னும் பெயர்தான் சரி என்றும் தெரிவித்து, வாரிசு சான்றிழை ரத்துசெய்ய நடவடிக்கை எடுத்த உத்தரவினை இம்மனுதாரரிடம் தெரிவித்துள்ள–

PADMANABAN VENKATASAMY

Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.20 15:06:25 +0530

தாகவும், அதன்படி ந.க.எண் 8201/2026/அ3 நாள் 08.07.2026ம் தேதியில் வழங்கப்பட்ட விசாரணை அறிக்கையை நீதின்றத்தில் தாக்கல் செய்து சாட்சியம் அளிக்க ஏற்ற வகையில் பழனி வட்டாட்சியரை மீண்டும் விசாரணை செய்ய அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) <u>1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம் :–</u>

மனு சங்கதிகள் மறுக்கப்படுகிறது. வாக்காளர் திருத்த சரிபார்ப்பின்படி வேலுச்சாமி என்ற பெயர் இல்லை என்றும் சக்திவேல் என்ற பெயர்தான் உள்ளது என்றும் கூறியுள்ளது முற்றிலும் உண்மைக்கு புறம்பான சங்கதி. 08.07.2026 தேதியிட்ட விசாரணை அறிக்கை குறித்த விபரங்கள் உண்மைக்கு புறம்பானவை. மனுதாரரும் இந்த எதிர்மனுதாரரும் கடந்த 2022ம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சி தேர்தலில் போட்டியிட்டதில் இந்த 1ம் எதிர்மனுதாரர் தேர்தலில் வெற்றி பெற்றதால் வன்மமுற்ற மனுதாரரும் அவரது கணவரும் இந்த எதிர்மனுதாரருக்கு முன்மொழிவு செய்த சின்னதம்பி மகன் வேலுச்சாமி என்பவர் இறந்துவிட்டார் என்றும், இறந்த நபரின் பெயரை பயன்படுத்தி உள்நோக்கத்துன் இந்த எதிர்மனுதாரர் முன்மொழிவு பெற்றதாக தவறான குற்றச்சாட்டை சுமத்தி அசல் மனுவை மனுதாரர் தாக்கல் செய்துள்ளார். இந்த எதிர்மனுதாரரை முன்மொழிவு செய்த வேலுச்சாமியின் சகோதரர் பெயரும் வேலுச்சாமி. சின்னதம்பியின் மகன்களான இவ்விரு வேலுச்சாமியின் பெயர்களும் வாக்காளர் பட்டியலில் உள்ள நிலையில், அப்பெயர் ஒற்றுமையை பயன்படுத்தி மோசடியாக இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.20 15:06:36 +0530

20.09.2025ம் தேதி மக்கள் குறைதீர்க்கும் நாளில் கொடுத்த மனு மீது பழனி வட்டாட்சியர் 04.06.2026ம் தேதி இந்த எதிர்மனுதாரரையும் முன்மொழிவு செய்த வேலுச்சாமி அவரது சகோதர சகோதரிகள் மற்றும் மனுதாரரின் கணவர் ஜீவானந்தம் ஆகியோர்களுக்கு அழைப்பாணை அனுப்பி 16.06.2026ம் தேதி விசாரணை நடத்தினார். அந்த விசாரணையின் முடிவாக 17.06.2026ம் தேதியிட்ட ந.க.எண்–8201/2026/ அ2–ன்படி, நீதிமன்றம் மூலம் உரிய பரிகாரம் தேடிக்–கொள்ள அறிவுறுத்தி குறிப்பாணை அனுப்பினார். இந்நிலையில் மனுதாரர் 08.07.2026ம் தேதி சாதகமான விசாரணை அறிக்கை வழங்கப்பட்டதாக நீதிமன்றத்தில் உண்மைக்கு புறம்பான தகவல்–களை தெரிவித்து மனுவை தாக்கல் செய்துள்ளது சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலைநிற்கத்தக்கதல்ல. இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

4) 8 முதல் 10 வரையான எதிர்மனுதாரர்கள் தரப்பில் "*எதிருரை இல்லை* " என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

5) இம்மனுவில் தீர்வுக்காக எழுகின்ற பிரச்னை யாதெனில், **தேர்தல் அசல் மனுவில் மீண்டும் நீதிமன்ற சாட்சி 5–ஐ அழைத்து மறுவிசாரணை செய்யக்கோரும் இம்மனு அனுமதிக்கத்தக்கதா** ? என்பதேயாகும்.

6) இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிய, சான்றாவணங்கள் எதுவும் முன் வைக்கப்படவில்லை. இருதரப்பும் கேட்கப்பட்டது.

PADMANABAN VENKATASAMY

Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.20 15:06:48 +0530

7) **பிரச்சினைக்கான தீர்வு :-**

மனுதாரர் பிரதான மனுவில் மனுதாரராக உள்ளார் என்பதும் பிரதான மனுவானது "*ஆயக்குடி 16-ம் வார்டில் 1ம் எதிர்மனுதாரர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது செல்லாதது என விளம்புகை செய்தும், மனுதாரரை ஆயக்குடி 16-ம் வார்டுக்கு வெற்றிபெற்ற வேட்பாளர் என அறிவிக்க உத்தரவிடக்கோரியும்*" பிரதான மனு தாக்கல் செய்யப்பட்-டுள்ளது என்பதும், பிரதான மனுவில் ஏற்கனவே நீதிமன்ற சாட்சி -5 ஆக பழனி வட்டாட்சியர் விசாரணை செய்யப்பட்டுள்ளார் என்பதும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாக உள்ளது.

8) மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில் " *வழக்கு நடைபெற்று வந்த சமயத்தில் மத்திய அரசால் கொண்டுவரப்பட்ட SIR வாக்காளர் திருத்தம் சரிபார்ப்பின்படி வேலுச்சாமி என்ற பெயருக்கு பதிலாக சக்திவேல் என்ற பெயர்தான் உள்ளது என்பது தெரியவந்தது என்றும், அதன்படி இம்மனுதாரர் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் மூலமாக நடவடிக்கை எடுத்ததில் பழனி வட்டாட்சியர் விசாரணை செய்து முத்தம்மாளின் வாரிசு சான்றிதழில் உள்ள வேலுச்சாமியின் பெயர் தவறு என்றும் சக்திவேல் என்னும் பெயர்தான் சரி என்றும் தெரிவித்து மேற்படி வாரிசு சான்றிழை ரத்துசெய்ய நடவடிக்கை எடுத்த உத்தரவினை இம்மனுதாரரிடம் தெரிவித்துள்ளதாகவும், அதன்படி ந.க.எண் 8201/2026/அ3 நாள் 08.07.2026ம் தேதியில் வழங்கப்பட்ட விசாரணை அறிக்கையை நீதின்றத்தில் தாக்கல் செய்து சாட்சியம் அளிக்க ஏற்ற வகையில் பழனி வட்டாட்சியரை மீண்டும் விசாரணை செய்ய அனுமதியளிக்க வேண்டும்* " என்று குறிப்பிட்டுள்ளார்.

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.20 15:06:58 +0530

9) "*மனுதாரர் 08.07.2026ம் தேதி சாதகமான விசாரணை அறிக்கை வழங்கப்பட்டதாக நீதிமன்றத்தில் உண்மைக்கு புறம்பான தகவல்களை தெரிவித்து மனுவை தாக்கல் செய்துள்ளார்* " என்று எதிர்மனுதாரர் மறுப்புரையில் கூறியுள்ளார்.

10) மனுதாரர் மனுவிலும், எதிர்மனுதாரர் மறுப்புரையிலும் கூறியுள்ள சங்கதிகளை கவனமாக பரிசீலனை செய்து பார்க்கும்போது, 1ம் எதிர்மனுதாரர், இறந்துபோன நபரின் பெயரை பயன்படுத்தி 1ம் எதிர்மனுதாரரை வேட்பாளராக முன்மொழிந்ததாக தேர்தல் ஆணையத்தில் உள்ள பட்டியலில் கையெழுத்து செய்துள்ளார் என்று குறிப்பாக குற்றச்சாட்டு கூறியுள்ளார் என்று தெளிவாக அறியமுடிகிறது. இத்தகைய சூழ்நிலையில், மனுதாரர் குறிப்பிடும் நபர் சம்பந்தமாக வட்டாட்சியர் அலுவலகத்தில் விசாரணை நடைபெற்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் அறியமுடிகிறது. மேற்படி விசாரணை அறிக்கையின் அடிப்படையில் சாட்சியம் அளிக்க நீதிமன்ற சாட்சி –5 ஐ மீண்டும் அழைக்கவேண்டுமென்று தாக்கல் செய்துள்ள மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்விதமான பெருத்த கஷ்ட நஷ்டமும் ஏற்படப்போவதில்லை. அதேசமயத்தில் பிரதான வழக்கில் மேற்படி நபரின் பெயர் பற்றிய பிரச்சினைதான் பிரதான குற்றச்சாட்டாக உள்ளநிலையில், இம்மனுவை அனுமதிப்பதே சரியாகவும் நியாயமானதாகவும் இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அவ்வாறே இப்பிரச்சினைக்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.20 15:07:06 +0530

**இறுதியில்**, இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்திரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் விரிவாக்கம் செய்து கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, 2026 ம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 20 ம் நாளாகிய இன்று அவையறியப் பகரப்பட்டது.

PADMANABAN VENKATASAMY

Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.20 15:07:16 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி**
**திண்டுக்கல்**

இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிய, சான்றாவணங்கள் :– ஏதுமில்லை

PADMANABAN VENKATASAMY

Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.20 15:07:22 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி**
**திண்டுக்கல்**